செய்தி வெளியீடு எண் : 628 நாள்: 18.04.2022

## செய்தி வெளியீடு

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், வள்ளிமதுரை கிராமம், வரட்டாறு நீர்த்தேக்கத்திலிருந்து 18.04.2022 முதல் பழைய ஆயக்கட்டு மற்றும் புதிய ஆயக்கட்டுப் பகுதிகளில் உள்ள 25 ஏரிகளுக்கு தொடர்ந்து 20 நாட்களுக்கு, நாள் ஒன்றிற்கு 30 கன அடி வீதம் 51.840மி.க.அடி தண்ணீர் விட்டும், புதிய ஆயக்கட்டுப் பகுதியில் உள்ள நேரடி பாசனத்திற்கு 20 நாட்களுக்கு நாள் ஒன்றிற்கு 30 கன அடி வீதம் 51.840 மிக.அடி தண்ணீர் விட்டும், ஆக மொத்தம் 40 நாட்களுக்கு 103.68 மி.க.அடி தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிட்டுள்ளது. இதன்மூலம் தருமபுரி மாவட்டத்திலுள்ள பழைய ஆயக்கட்டு பரப்பு 2255 ஏக்கர் நிலங்கள் மற்றும் புதிய ஆயக்கட்டு பரப்பு 2853 ஏக்கர் நிலங்கள், ஆக மொத்தம் 5108 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**
**நீர்வளத் துறை**

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in